**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் நாள் புதன்கிழமை

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 159/2023</u>

<u>CNR NO.TNTU09-004439-2023</u>

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,<br>அம்பலூர் காவல் நிலையம்,<br>குற்ற எண். 298/2020. |
| 2. | எதிரிகள் | 1.சோலைராஜ் த/பெ. நாகராஜ்<br>2.யுவராஜ் த/பெ. நாகராஜ்<br>3.சத்தியராஜ் த/பெ. கோபால் |
| 3. | குற்றம் | இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 324, 506(1). |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 06.06.2020 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள். | 07.06.2020 |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | 08.06.2020 - 08.06.2020 |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 16.06.2023 |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 19.09.2023 |
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | 1.14.03.2024 குவிமுச.பிரிவு 320(2)-ன் கீழ் 1583/2024. |
| 10 | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1-14.03.2025<br>அ.சா.2, அ.சா.3-20.09.2024<br>அ.சா.4-06.02.2025<br>அ.சா.5-26.03.2026 |
| 11 | எதிரிகளிடம் குற்றம் குறித்து | 27.03.2026 |

| | | |
|---|---|---|
| | கு.வி.மு.ச.313(1) (ஆ)–ன் கீழ் வினவிய நாள் | |
| 12 | எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | – |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 01.04.2026 |
| 14 | தீர்வு | குவிமுச பிரிவு 248 (1) கீழ் விடுதலை. |

**<u>நீதித்துறை படிவம் எண்: 61</u>**

புகார்தாரர் : அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், அம்பலூர் காவல் நிலையம்.

எதிரிகள் : 1.சோலைராஜ் த/பெ. நாகராஜ்
2.யுவராஜ் த/பெ. நாகராஜ்
3.சத்தியராஜ் த/பெ. கோபால்

குற்றம் : இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 324, 506(1).

முடிவு : இறுதியாக, அரசு தரப்பில் 1 முதல் 3ம் எதிரிகளுக்கு எதிரான இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 324, 506(1) குற்றச்சாட்டுகள் ஆனது சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்து எதிரிகளை வழக்கிலிருந்து குவிமுச பிரிவு 248 (1) கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

| வ. எண் | எதிரிகள் பெயர் | தந்தை/கணவர் பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | சோலைராஜ் | நாகராஜ் | இந்து | கூலி | சங்கராபுரம், வாணியம்பாடி | 35 |
| 2 | யுவராஜ் | நாகராஜ் | இந்து | கூலி | சங்கராபுரம், வாணியம்பாடி | 36 |
| 3 | சத்தியராஜ் | கோபால் | இந்து | கூலி | சங்கராபுரம், வாணியம்பாடி | 39 |

| தேதி | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக்கை | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | விசாரணையின் தொடக்கம் | விசாரணையின் முடிவு | உத்தரவு | |
| 06.06.20 | 07.06.20 | 08.06.20 | 08.06.20 | 19.09.23 | 27.03.26 | 01.04.26 | – |

இவ்வழக்கானது 16.06.2023 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 27.03.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை 1 திருமதி.மகேஸ்வரி அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.கருணாகரன் B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும் இது நாள் வரை விசாரணை செய்தும் வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கிடும்

## தீர்ப்புரை

### 1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:

இவ்வழக்கில் அம்பலூர் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட சங்கராபுரம் கிராமத்தில் கடந்த 06.06.2020ம் தேதி இரவு சுமார் 10.30 மணிக்கு சாட்சி 2 தினேஷ்குமார் என்பவர் வீட்டில் இருந்தபோது அதே கிராமத்தைச் சேர்ந்த எதிரிகள் சோலைராஜ், யுவராஜ், சத்தியராஜ் ஆகியோர்கள் அனைவரும் தெருவில் 2ம் எதிரி யுவராஜ் பிறந்தநாளை கேக் வெட்டி கொண்டாடி கூச்சல் போட்டு கொண்டிருந்ததை சாட்சி 2 தினேஷ்குமார் என்பவர் ஏன் கூச்சல் போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு 2ம் எதிரி யுவராஜ் என்பவர் தினேஷ்குமாரை கையால் அடித்ததை சாட்சி1 ராஜேஷ் ஏன் அடித்தீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் 1 முதல் 3 வரையிலானவர்கள் அப்படித்தான் அடிப்போம், சத்தம் போடுவோம், கூத்தடிப்போம் நீ யாருடா எங்களை கேட்பதற்கு தேவிடியா பையா என்று தகாத வார்த்தைகளால் திட்டியும், 2ம் எதிரி யுவராஜ் சாட்சி 2 தினேஷ்குமார் என்பவரை கையால் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியும், 1ம் எதிரி சோலைராஜ் சாட்சி1 ராஜேஷ் என்பவரை சூரி கத்தியால் வலது பக்க தலை மீது வெட்டியும், சாட்சி 3 அமுதா என்பவரை அதே சூரி கத்தியால் இடது கை மணிக்கட்டில் கிழித்தும், 2ம் எதிரி யுவராஜ் என்பவர் சாட்சி 3 அமுதா என்பவரை கல்லால் வலது கணுக்கால் அருகில் குத்தி சொற்பகாயம் ஏற்படுத்தியும், எதிரிகள் மூவரும் சாட்சி 1 ராஜேஷ் என்பவரை மிரட்டியுள்ளார்கள். எனவே, எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 323, 324, 506(i) சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அம்பலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் மீது முகாந்திர வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் இ.த.ச. பிரிவுகள் 294(பி), 323, 324, 506(i) சட்டத்தின் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எதிரிகள் ஆஜரானதும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, ஆவணங்களை பரிசீலித்தும் எதிரிகள் மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால், எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 323, 324, 506(i) சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி கூற வினவியபோது, எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.5** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரியான திரு.நாகபூஷணம், காவல் உதவி ஆய்வாளர் என்பவருக்கு பதிலாக அம்பலூர் காவல் நிலையத்தின் தற்போதைய காவல் உதவி ஆய்வாளர் திரு.காதர்கான் என்பவர் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இதற்கு எதிரிகள் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவிக்கப்பட்டது. **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5.அரசு தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம் :**

5 (i). அ.சா 1 ராஜேஷ் இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் காயமுற்றவர் ஆவார். சுமார் 3 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் அ.சா.1 வீட்டிற்கு வெளியே நாய் குரைக்கும் சத்தம் கேட்டு வந்து பார்த்தபோது அருகிலிருந்த பாலத்தின் மீது விழுந்து விட்டதால் ஏற்பட்ட காயத்திற்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார். இதை குறித்து தகவலை பெற்று திரு.நாகபூஷனம், உதவி ஆய்வாளர் மருத்துவமனை சென்று சிகிச்சையில் இருந்த அ.சா.1 ராஜேஷை விசாரித்து அ.சா.ஆ.5 புகார்

வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5 (ii). திரு.நாகபூஷனம், உதவி ஆய்வாளர் அ.சா.ஆ.5 புகார் வாக்குமூலம் பெற்று அந்த வாக்குமூலத்திற்கேற்ப சி.எஸ்.ஆர். எண் 158/2020 வழங்கி பின் அதற்கேற்ப நிலைய குற்ற எண் 298/2020 இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(i) சட்டத்தின் கீழ் அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். 07.06.2020ம் தேதி மாலை 16.00 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் அ.சா.2 ஞானசேகரன், அ.சா.4 மேகநாதன் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.7 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.8 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

5(iii). பின்பு, சாட்சிகள் அ.சா.3 தனபால், முனுசாமி முன்னிலையில், எதிரி பயன்படுத்திய சூரிக்கத்தி ஒன்றையும், 500 கிராம் எடையுள்ள கருங்கல் ஒன்றையும் அ.சா.ஆ.9 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார். பின்னர் சாட்சிகள் அ.சா.1 ராஜேஷ், அ.சா.2 ஞானசேகர், அ.சா.3 தனபால், அ.சா.4 மேகநாதன், அமுதா, முனுசாமி, தினேஷ்குமார், ஸ்டீபன் ராஜ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின் 07.06.2020ம் தேதி 17.00 மணிக்கு சங்கராபுரம் பஞ்சாயத்து ஆபிஸ் அருகில் எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். அ.சா.1 ராஜேஷ்க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.சத்தியபாக்கியலட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.10 காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். பின்னர் புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீதான குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(i) சட்டத்தின் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு பாதகமாக அமைந்ததை சாட்சிய சூழ்நிலைகளை எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(i)(ஆ)–ன் கீழ் வினவியபோது எதிரிகள் மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என கூறினார்கள். மேலும் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை

மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்.**

7. இவ்வழக்கில் கடந்த 06.06.2020ம் தேதி இரவு சுமார் 10.30 மணிக்கு எதிரிகள் சோலைராஜ், யுவராஜ், சத்தியராஜ் ஆகியோர்கள் அனைவரும் தெருவில் 2ம் எதிரி யுவராஜ் பிறந்தநாளை கேக் வெட்டி கொண்டாடி கூச்சல் போட்டு கொண்டிருந்ததை சாட்சி 2 தினேஷ்குமார் என்பவர் ஏன் கூச்சல் போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு 2ம் எதிரி யுவராஜ் என்பவர் தினேஷ்குமாரை கையால் அடித்ததை சாட்சி1 ராஜேஷ் ஏன் அடித்தீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் 1 முதல் 3 வரையிலானவர்கள் அப்படித்தான் அடிப்போம், சத்தம் போடுவோம், கூத்தடிப்போம் நீ யாருடா எங்களை கேட்பதற்கு தேவிடியா பையா என்று தகாத வார்த்தைகளால் திட்டியும், 2ம் எதிரி யுவராஜ் சாட்சி 2 தினேஷ்குமார் என்பவரை கையால் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியும், 1ம் எதிரி சோலைராஜ் சாட்சி1 ராஜேஷ் என்பவரை சூரி கத்தியால் வலது பக்க தலை மீது வெட்டியும், சாட்சி 3 அமுதா என்பவரை அதே சூரி கத்தியால் இடது கை மணிக்கட்டில் கிழித்தும், 2ம் எதிரி யுவராஜ் என்பவர் சாட்சி 3 அமுதா என்பவரை கல்லால் வலது கணுக்கால் அருகில் குத்தி சொற்பகாயம் ஏற்படுத்தியும், எதிரிகள் மூவரும் சாட்சி 1 ராஜேஷ் என்பவரை மிரட்டியுள்ளதாக அரசு தரப்பில் எதிரிகள் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

8. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் எதிரிகள் தரப்பிலும் புகார்தாரார் தரப்பிலும் சமாதானமாக சென்று விட்டார்கள். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், அரசு தரப்பில் மற்ற சாட்சிகள் யாரும் அரசு தரப்பை வலுசேர்க்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் எதிரிகளுக்கு சந்தேகத்தின் பலனை அளித்து விடுதலை செய்ய வேண்டும் என வாதங்கள் முன்வைக்கப்பட்டன.

9. புகார்தாரரான அ.சா.1 ராஜேஷ் அரசு தரப்பில் அ.சா.1ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 ராஜேஷ் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " சுமார் 3 வருடங்களுக்கு முன்பு வீட்டிற்கு வெளியே நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. அப்போது வந்து பார்த்தபோது அருகில் இருந்த பாலத்தின் மீது விழுந்து விட்டேன். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது. அதனால் சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பத்தை மருத்துவமனையில் யாரோ மயக்கத்தில் இருந்தபோது வாங்கி சென்றார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. " என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

10. இவ்வழக்கில் பார்வை மகசர் சாட்சியான அ.சா.2 ஞானசேகரன் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " என்ன பிரச்சனை என்று தெரியாது. பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது அல்ல, வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னை போலிசார் விசாரிக்கவில்லை. " என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

11. இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.3 தனபால் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " என்ன பிரச்சனை என்று தெரியாது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்தை சுமார் நான்கைந்து வருடத்திற்கு முன்பு எங்கள் தெருவில் அமுதா வீட்டாருக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் இடையே கூச்சல் நடந்தது என சிறுவர்கள் என்னிடம் கூறினார்கள். அந்த சமயத்தில் நான் ஊர் நாட்டாமைகாரராக இருந்தேன். அதனால் போலிசார் என்னிடம் வெற்று தாளில் கையொப்பம் பெற்றார்கள். " என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

12. இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 மேகநாதன் அவரது நீதிமன்ற விசாரணையின்போது, " பிரச்சனை குறித்து எனக்கு எதுவும் தெரியாது. சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு எதிரிகளும், அ.சா.1ம் சண்டை செய்து கொண்டதாக காவல் நிலையத்திலிருந்து என்னை அழைத்தார்கள். ஊர் துணை தலைவராக இருந்ததால் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி

தரப்பு குறுக்கு விசாரணையின்போது நான் எழுதப்படாத வெள்ளை தாளில் தான் கையொப்பம் செய்தேன் என்றும், தற்போது வரை அந்த தாளில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியாது. " என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 2, 3, 4, 8, 9, 10 விசாரிப்பதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட இவ்வழக்கின் அ.சா.1 ராஜேஷ், பார்வை மகசர் சாட்சியான அ.சா.2 ஞானசேகரன், கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.3 தனபால் ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு நீதிமன்றத்தின் அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில், அரசு தரப்பு வழக்கு வலுசேர்க்கும் வகையில் எவ்வித சங்கதிகளும் வெளிக்கொணரப்படவில்லை. பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 மேகநாதன் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார். ஆகையால், அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்களின் சாட்சியம் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க உகந்தது அல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. இவ்வழக்கில் அ.சா.5 காதர் கான், உதவி ஆய்வாளர், அவரது சாட்சியத்தில் புலன்விசாரணை அதிகாரியான திரு. நாகபூஷணன் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பெயரில் அ.சா.1 ராஜேஷை விசாரித்து அ.சா.ஆ.5 புகார் வாக்குமூலத்தினைப் பெற்று சி.எஸ்.ஆர். எண் 158/2020 என வழங்கி அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.7 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.8 மாதிரி வரைபடம் தயார் செய்ததை குறித்தும், சாட்சிகள் முன்னிலையில் எதிரி அடிக்க பயன்படுத்திய சூரி கத்தி ஒன்றையும், கருங்கல் ஒன்றையும் அ.சா.ஆ.9 கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதைக் குறித்தும், எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதை குறித்தும், சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்து, அ.சா.1க்கு சிகிச்சையளித்த மருத்துவர் திருமதி. சத்தியபாக்கியலட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.10 காயச்சான்று பெற்றதை குறித்தும், புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்து குறித்து

சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

15. அ.சா.1 ராஜேஷ், புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையின்போது, எதிரிகள் சோலைராஜ், யுவராஜ், சத்தியராஜ் ஆகியோர்கள் அனைவரும் தெருவில் 2ம் எதிரி யுவராஜ் பிறந்தநாளை கேக் வெட்டி கொண்டாடி கூச்சல் போட்டு கொண்டிருந்ததை சாட்சி 2 தினேஷ்குமார் என்பவர் ஏன் கூச்சல் போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு 2ம் எதிரி யுவராஜ் என்பவர் தினேஷ்குமாரை கையால் அடித்ததை சாட்சி1 ராஜேஷ் ஏன் அடித்தீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் 1 முதல் 3 வரையிலானவர்கள் அப்படித்தான் அடிப்போம், சத்தம் போடுவோம், கூத்தடிப்போம் நீ யாருடா எங்களை கேட்பதற்கு தேவிடியா பையா என்று தகாத வார்த்தைகளால் திட்டியும், 2ம் எதிரி யுவராஜ் சாட்சி 2 தினேஷ்குமார் என்பவரை கையால் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியும், 1ம் எதிரி சோலைராஜ் சாட்சி1 ராஜேஷ் என்பவரை சூரி கத்தியால் வலது பக்க தலை மீது வெட்டியும், சாட்சி 3 அமுதா என்பவரை அதே சூரி கத்தியால் இடது கை மணிக்கட்டில் கிழித்தும், 2ம் எதிரி யுவராஜ் என்பவர் சாட்சி 3 அமுதா என்பவரை கல்லால் வலது கணுக்கால் அருகில் குத்தி சொற்பகாயம் ஏற்படுத்தியும், எதிரிகள் மூவரும் சாட்சி 1 ராஜேஷ் என்பவரை மிரட்டல் விடுத்ததாக கூறிவிட்டு, அதற்கு முற்றிலும் மாறாக, தனது நீதிமன்ற விசாரணையின்போது, அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக **சுமார் 3 வருடத்திற்கு முன்பு வீட்டிற்கு வெளியே நாய் குரைக்கும் சத்தம் கேட்டு வந்து பார்த்தபோது அருகில் இருந்த பாலத்தின் மீது விழுந்து காயம் ஏற்பட்டதாக** பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அதற்கேற்றாற்போல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது எதிரிகள் தரப்பினரும் அ.சா.1ம் சமாதானம் ஆகிவிட்டதாக கொடுத்த 14.03.2024ம் தேதி கு.வி.மு.ச பிரிவு 320ன் கீழ் குற்ற பல்வகை மனு எண் 1583/2024ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி, மனுவானது இவ்வழக்கின் சில குற்றங்கள் சட்டப்படியாக சமரசம் தீர்த்துக்கொள்ள முடியாத குற்றங்கள் என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது.

16. இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சியான அ.சா.1 ராஜேஷ் அவரது சாட்சியத்தில் அ.சா.ஆ.5 புகார்வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தை

மருத்துவமனையில் மயக்கத்தில் இருந்தபோது யாரோ வாங்கி சென்றதாக சாட்சியம் அளித்துள்ளதால், இவ்வழக்கின் மூலஆதாரமான அ.சா.ஆ.5 புகார்வாக்குமூலமே சந்தேகத்திற்கு உள்ளாகுவதாலும், மேலும் அ.சா.1 அவரது சாட்சியத்தில் **சுமார் 3 வருடத்திற்கு முன்பு வீட்டிற்கு வெளியே நாய் குரைக்கும் சத்தம் கேட்டு வந்து பார்த்தபோது அருகில் இருந்த பாலத்தின் மீது விழுந்து காயம் ஏற்பட்டதால் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதாக** பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், பார்வை மகசர் சாட்சியான அ.சா.2 ஞானசேகரன் வழக்கு பற்றி எதுவும் தெரியாது என பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.3 தனபால் தனது நீதிமன்ற விசாரணையின்போது, போலிசார் வெற்று தாளில் கையொப்பம் பெற்றுச்சென்றதாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 மேகநாதன் பிரச்சனை பற்றி எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதாலும், அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கை வலுசேர்க்கும் வகையில் சாட்சியம் அளிக்காத நிலையில், புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 காதர்கான் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிகள் குற்றம் புரிந்தார்கள் என தீர்மானிக்க இயலாது என்பதாலும், அரசு தரப்பில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(i) கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று மேற்கண்ட பிரச்சனைக்கு அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

17. **முடிவாக,** இவ்வழக்கில் எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 294(பி), 323, 324, 506(i)–ன் கீழான குற்றத்தை பொறுத்து எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

18. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை. எதிரி எழுதி கொடுத்த பிணை பத்திரத்தை மேல்முறையீடு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்து

சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/−கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திரு.ராஜேஷ் |
| 2 | அ.சா.2 | திரு.ஞானசேகரன் |
| 3 | அ.சா.3 | திரு.தனபால் |
| 4 | அ.சா.4 | திரு.மேகநாதன் |
| 5 | அ.சா.5 | திரு.காதர்கான், உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 07.06.2020ஆம் தேதியிட்ட புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம். |
| 2. | அ.சா.ஆ.2 | 14.03.2024ஆம் தேதியிட்ட சமாதான மனு. |
| 3. | அ.சா.ஆ.3 | 07.06.2020ஆம் தேதியிட்ட கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம். |
| 4. | அ.சா.ஆ.4 | 07.06.2020ஆம் தேதியிட்ட பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம். |
| 5. | அ.சா.ஆ.5 | 07.06.2020ஆம் தேதியிட்ட புகார்வாக்கு மூலம். |
| 6. | அ.சா.ஆ.6 | 07.06.2020ஆம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை. |
| 7. | அ.சா.ஆ.7 | 07.06.2020ஆம் தேதியிட்ட பார்வை மகசர். |
| 8. | அ.சா.ஆ.8 | 07.06.2020ஆம் தேதியிட்ட மாதிரி வரைபடம். |
| 9. | அ.சா.ஆ.9 | 07.06.2020ஆம் தேதியிட்ட கைப்பற்றுதல் மகசர். |

| | | |
|---|---|---|
| 10. | அ.சா.ஆ.10 | 05.11.2020ஆம் தேதியிட்ட ராஜேஷ் என்பவரின் காயச்சான்று. |

**<u>அரசு தரப்பு சான்று பொருள்</u> –** இல்லை.

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றுப் பொருட்கள்</u> –** இல்லை.

**<u>எதிரி தரப்பு சான்றாவணம்</u>** – இல்லை

**<u>குறிப்பு</u>**

1) எந்த சாட்சியும் 3 முறைக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

**//உண்மை நகல்//**

SRIPATHI K
JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.